Tursellinus gives the following account of the conversion of these *Paravers*. Being oppressed by the Mohammedans they sent a deputation of their tribe to Cochin, with an offer to turn Christians if the Portuguese would deliver them from the oppression of the Mohammedans. The offer was accepted by the Governor of Cochin and by the Viceroy, who undertook the secular part of the agreement, while Michael Vass, the Vicar General residing at Cochin, managed the spiritual part of the affair by baptizing the members of the Deputation and sending priests to the Fishery Coast, who he says, baptized 20,000 and then left the coast.

Such, says Mr. Venn, " was the sphere of labour to which Xavier was destined to devote his first energies. In a Missionary point of view, he was set to build upon another man's foundation. In a political view, he was set to secure to the king of Portugal the monopoly of a lucrative Pearl Fishery-" Xavier with some natives trained at Goa, who could speak the Portuguese and the Tamil languages proceeded to the Fishery. Here he laboured a year. It is interesting to know how *he* worked in Mission matters. From his own letters we learn that Xavier, immediately upon his arrival set to work to have the Creed, the Lord's Prayer, the Ave Maria and the Decalogue translated into the vernacular. *He then committed the translations to memory.* Four months were occupied in this work." And yet Xavier could count the converts by hundreds as the result of this mechanical sort of operation. Hear his own words, —" How great the number of those who are gathered into the fold of Christ you may learn from this, that it often happens to me, that my hands fail through the fatigue of baptizing; for, *I have baptized a whole village in a single day.*" Now to estimate this success it must be borne in mind,—" That Xavier is speaking of certain villages inhabited by those who had entered into a profitable alliance with the Portuguese *on condition of embracing Christianity*". Again, and quoting his own words, "I appoint all to assemble on festival days, and to chant the rudiments of the Christian faith; and in each of the villages I appoint a fit person to preside. *For their wages* the Viceroy, at my request, has assigned 4000 gold fanams." Mr. Venn subjoins, " the expenditure of 4000 Rupees in 30 villages would easily secure the attendance of the inhabitants to go through their recitation, at the sound of Xavier's bell. Xavier had not mastered the language sufficiently to be understood after two years' residence, —under date August 21–1544 he writes: " here I am almost alone from the time that Anthony remained sick at Manapar; and I find it almost inconvenient position to be in the midst of a people of an unknown tongue without the assistance of an interpreter. Conceive, therefore, what kind of life I live in this place, what kind of Sermons I am able to address, to the assemblies, when they who should repeat my address to the people *do not understand me nor I them!* I ought to be an adept in dumb show!"

" There is, says Mr Venn, reason to doubt whether Xavier's Catechumens understood so much as the meaning of the words put into their lips; for after all the baptisms recounted above, Xavier informed Mansilla that they had mistranslated the very first word of the Creed; and that, instead of the word " I believe" — they had been using the expression " I will!" Alas! Alas! and this man is held up as our model. J. K.

## SPICY BREEZE FROM CEYLON.

Mr. Punch's Colonial connections are ramifying so enormously that he is thinking, of appointing a Colonial editor. (To prevent disappointment, no Grey, Elliott, or Irishman need apply.) From Her Majesty's Fifty Colonies he receives an amount of correspondence which he begs hereby to acknowledge, and friends at a distance will please accept this intimation. He is obliged to keep his geographical map constantly turned on, he can tell you, especially when the Australian mails come in. However, he is equal to the occasion, and has made such proficiency that he is quite confident that Melbourne is not in Tasmania, a point on which he should be sorry to examine a good many Members of Parliament.

Well, talking of Colonies and examinations, a Cingalese friend —(won't he stamp when he reads this—we mean a friend in Ceylon has sent him an extract from a report of the Central School Commission, for that interesting island, over which the spicy breezes blow soft, and where every prospect pleases and only man is vile, according to Bishop Heber. This extract purporteth to give some of the answers of the best candidate out of twenty-six who underwent examination in Ceylon. When Mr Punch recollects the awful problem set for our unoffending Indian fellow-subjects by Sir Charles Trevelyan, to which Mr. Punch adverted the other day, it comes to his mind that he should like to hear a competition Wallah upon these responses.

'Longitude are lines which divides the earth into several spaces."

We consider this rather a good shot, and would respectfully offer Mr. Cox, of Finsbury five minutes (Pinnock left alone) to write a better answer.

"Grammar teaches us the art of speaking and reading, and of the proper manner which they undergo."

'Undergo' is not a bad word. Because it shows that these poor young fellows in Ceylon feel this persecution of being compelled to submit to the arch-tyrant, L. Murray. Their allegiance is decidedly imperfect.

"Peter the hermit 'was a pilgrimage and he use to go to the holy city every year to worship since he thought there his prayers would be more certainly excepted."

Very near the mark again, and we request penny-a-liners, who criticise a singer by saying that they were 'delighted to hear her eliminate fresh beauties from the favourite air of.' &c., not to turn up their phonographic noses.

'Before Bacon the people of England were not so acquainted with the subject, because this was first man who taught the people how to do it.'

"(The above is tendered as a 'short sketch' of the history of Bacon, and is all that is said upon the matter.)"

And quite enough too. All that most English people know concerning Bacon is that he lived about the time of Elizabeth, is thought to have written Shakspeare's plays, and said that knowledge is power, which he never did say. Yes, some folks think he invented a *New Organ*, for which they dont thank him.

'Milton was a poet who lived in the present century, and who has been very much esteemed by a many people for being an excellent poet.'

So he was. Will Mr. Masson say that he was not an excellent poet? We consider him an uncommonly excellent poet. As for the 'present century'—he lives in every century, he was not for an age, but for all centuries.

'In answer to the question 'What changes have recently taken place in the territorial extent of the Austrian empire?—one writes, 'the change of monsoons and weather has recently taken place in the territorial extent of the Austrian empire.'

Quiet right. 'Monsoons' is only a slip of the pen for 'Mossoos,' and the writer was evidently aware of the complication of French relations with Austria. The last extract we shall offer is this:—

"A simple historical allusion in a well-known" poem by Tennyson,—where the 'oak' is spoken of.—

"Wherein the younger Charles abode
Till all the paths were dim
And far below the Round head rode,
And humm'd a surly hymn."

Is thus explained by one of the very best of the candidates:-

'This allusion is referred to Milton. He was honored by England, and he was dear to England, as an oak-tree was. He is said to have lived in the reign of young Charles in an age when literature had not flourished much. He is said to have sung hymns in the road Roundhead.'

We consider this a brilliant and beautiful answer, and one which resembles the celebrated note on Shakspeare, which another annotator, in an ecstacy of admiration, declared had placed his predecessor on a level with the author. We have no doubt that the Ceylon candidate is quite right, and that Mr. Tennyson did mean Milton. He was notoriously fond of music, therefore might have hummed hymns, and his ill success in the matrimonial line makes it very probable that he could be surly on occasion. We firmly believe that he did live in the reign of Young Charles, though it was not Young Charle's fault that his living was not rather briefly put an end to. The 'Road Roundhead' gives us pause; but there is a Cromwell Road at Brompton, and we are not to reject an original surmise merely because it is new to us, or what would become of commentators generally?

On the whole we see no reason to be dissatisfied with the progress made by our young friends in Ceylon, and if the following remark, which our correspondent also sends, be applicable to the youth of that island, we know another island (not a thousand miles from any place which is only nine hundred ninty-nine miles distant, to which the remark would also be applicable, and as the Christmas holidays are coming, parents and guardians will have an opportunity of testing the truth of the allegation.

"The youth of this country, as a rule, have excellent memories. They are able to retain for a short time any amount of multiplex and (to them) almost unintelligible sounds. These they are able to repeat more or less accurately, when ever a corresponding set of familiar sounds, in the form of a question is employed to awaken the required train of associations."

Punch.

## GRAVE AND GAY.

A Stroke of Business.—It is told of a well-known American map-agent out here that, on a recent trip in the interior of the Island, he was attacked by highway robbers, who demanded his money. Being more prudent than to carry money in the country, they failed in making a haul. " But," said our Yankee, "I have some splendid maps of the Island along with me, which I would like to show you;" and in a twinkling he was off his horse, and a map stuck up on a pole, and explained it so effectually that he sold each of the banditti a map pocketed the money, and resumed his journey, better off for the encounter.—*Harper's New Monthly Magazine.*

A Happy Release—Good old Deacon A———, having occasion to spend a night at an hotel, was assigned a room in which there were single beds, two of which already contained occupants. Soon after the light was extinguished a man in one of the other beds began to snore so loudly as to prevent his falling asleep. The Tumult increased as the night wore away, until it became absolutely fearful. Some two or three houres after midnight the snorer turned himself in bed, gave a hideous groan and became silent. The Deacon had supposed the third gentleman asleep until, at this juncture he heard him exclaim, "He's dead! thank God! He's dead!"—*Harper's New Monthly Magazine.*

Comfort and Economy in Smoking.—A correspondent of the *Manchester Examiner* has made a discovery which will greatly promote comfort and economy in smoking, the result being achieved by a simple plan of keeping the tobaco-pipe cool. His instructions are—Take a piece of sponge three quarters of an inch square (in a dry state) make a small hole through the centre then steep it in water until it becomes distended. Squeeze the water out, and put the stem of the pipe through the hole until the bowl comes in contact with the centre of the sponge. Charge the pipe, and fill the sponge with the cold water; then commence smoking, and it will be found that a saving of 25 per cent in tobacco is effected, with an improvement in the flavor

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்காபிமானி.

ஆஅளசுசம் ௵. தை மீ ௨௨ ௳.

## அறிவித்தல்.

மட்டக்களப்பென்னும்நாடு இற்றைக்குப் பத்துவருடத்திற்குமுன் இருந்தநிலைமைக்கு இப்போ அதிகம் சீர்திருத்தமாய்விட்டதாகக் காணப்படுகுது. சீர்திருத்தமானதுமாத்திரமல்ல இவ்வூரில் குடிசனங்களும் பொருள்நன்மைகளை அடையத்தக்க சிலபல வதுசரங்களையும் பெற்றுக்கொண்டார்கள். இது வெல்லாம்இவ்விடத்துக்குடிஸ்திநிக்குரீதவானுகிய Mr. Birch) என்பவரால்தான். (Mr. Birch) துரைஅவர்கள் வில்லுக்கட்டுவேலையை நிறைவேற்றி அதினால் சனங்கள் வேளாண்மையை மகிழ்குண்டிப்போக்காலத்தும் குறைவானகாலத்தும் விளைவிக்கிறதினால் சொல்லமுடியாத ஒரு நயம் சனங்களுக்கு உண்டாயிருக்குது. இதுபோலான நன்மைகளை ஊருக்கும் சனங்களுக்கும் செய்ததுமாத்திரமல்ல எல்லாத்திலும் பிரதானமான ஒரு நயம் ஊருக்குண்டாயிருக்குது. ஏதெனில் துட்டர்களுடையகைகளெல்லாம் கட்டப்பட்டும் மனமெல்லாம் அடக்கப்பட்டும் நல்லோர்கள் இடைஞ்சலின்றிநடந்து நன்மைகள் விழங்கவும் வளரத்தக்கவே இடமுமாய் இருக்கப்பட்டன இதுவெல்லாம்(Mr. Birch) துரைஅவர்கள் இந்த ஊருக்குவந்ததின்மேல் உண்டாகிய ஓர் நன்மை பிரதானமாய் இவருடைய பேர்நாமத்தைக்கேட்கிற அளவிலும் பொல்லாதவர்களிடமுண்டாகின்ற துற்குணங்களெல்லாம் அகன்றுபோகிறதாகச்சிலபல அத்தாட்சிகளினால் அறிந்தேன். பிரதானமாய் இவர் இந்தவூருக்கு வந்ததின்மேல் கொவறணமேந்தாருக்கு மாத்திரமல்ல குடிசனங்களுக்குமுண்டாகிய நன்மையும் பலனும் அதிகமென்பதை இத்தால் விளம்பரப்படுத்துகிறேன்.

(Mr. Dyke) துரைஅவர்கள் யாழ்ப்பாணத்தைத்திருத்தியது போல கொஞ்சம் முன்பின்னாக இவரும் இந்த ஊரைச் சீர்திருத்தமாக்கி ஊருக்கு அவசியமான நன்மைகளையும் செய்துவருகிறார். இதுகாரியங்கள் தங்கள் புதினத்தில் போடுஞ்சிலவு கட்டாயமாய் அனுப்பிவைக்கிறேன். A. M. Canapadypully.

☞ மேலேக்கடிதத்தில் உள்ளவைகள் விளம்பரமோ புதினமோ என அறியாது எழுதினதற்காய் கடிதன் வரியொன்றிற்குஇரண்டுபென்சு தெண்டமிறுக்கத் தீர்வையிடுகிறோம். இல. பத்.

## அம்மைஆஸ்பத்திரி.

இந்த ஆஸ்பத்திரியின் பராபரிப்பு மெஸ்தர் போன் உலகசேகரம்பிள்ளையில் வந்ததற்காய் மிகவுஞ் சந்தோஷப்படுகிறோம். ஆஸ்பத்திரியிலுள்ள துன்பக்காரருக்குப் போசனம்முதலியன சரியாய்க் கொடுபடுகின்றதோவென்பதை இவர் பலவகையாய் ஆராய்ந்து ஏதொருகுறைவின்றித் துன்பக்காரருக்கு வேண்டிய யாவையுந் தன்னாற்கூடியமட்டாய்ச் செய்துவருகிறார். இந்த ஆஸ்பத்திரியில் வரும் பெண்களைப் பராபரிக்கும் நோக்கமாய் ஒரு மனுஷியை எங்கள் ஏசன்றுத்துரை நியமனஞ்செய்திருந்தார். அந்த மனுஷியை இப்போ நிறுத்திவைதத முகாந்தரம் ஏதென நமக்குப்புலப்படவில்லை.

## கோட்டில்நின்று கொலைசெய்யப்பார்த்தல்.

மார்கழி மாதம் ௨௩ தேதியிலன்று மித்திலக்ஸ் இல்கூடின சுப்பிரீங்கோட்டில் கென்றிமூலேறு என்பவன் களவுகாரியத்தில் குற்றவாளியாய்க் காணப்பட்டான். யூரித்துரைமார் அவனைக் குற்றவாளியெனச் சொன்னவுடன் பதியற்காரன் சாக்கிலிருந்து இருபுறமுங் கூராயிருக்கும் ஒரு இரும்புத்துண்டையெடுத்துக்கொட்டூடென்னும் சாட்சிக்காறன் ஒருவனுக்கெறிந்தான். அது தற்செயலாய் அவனில்படாது எறிந்தவன் நின்றவிடத்திற்கிருபதடிக்கப்பாலிருந்த சாளரவாயிலொன்றிற்பட்டு அதினன கண்ணாடிகளையும் உடைத்து சுவரிலும் மூன்றேகால் இஞ்சு தாழ்வுக்கு ஒரு குழியையும் உண்டாக்கிற்று. மதியற்காரன் ஆறு வருஷத்திற்குப் பரதேசத்திற்கேற்றப்படும்படி தீர்வையிடப்பட்டான்.

## றேயில்வேகோம்பனியார் இறுத்ததெண்டம்.

வடமேற்கு றெயில்வேகொம்பனியாரது அம்மினிபஸ் என்னும்பண்டியொன்றில் "விருங்கில்" என்னும் நாமமுள்ள ஓர் வாலிபன் திப்பக்றன்நகரத்திற்கும் வேலிப்பாலத்திற்கும் இடையே போம்போது தபால்பண்டிக்காரனும் இந்தப்பண்டிக்காரனும் பந்தையத்திற்குப் பண்டிகளைச்செலுத்தினார்கள். கடைசியாய்ப் பண்டிக்காரன்பக்கத்திற்றுப் பண்டியைக்கொண்டுபோக பண்டி குடைக்கொண்டது. அதிலேறிப்போன விருங்கில் பணிபவிழுந்தான். மூளையிலும் முன்னெலும்பிலும் சேதமுண்டாயிற்று. இதைக்குறித்த வியாச்சியம் "குவீன்ஸ் பெஞ்சு" என்று இங்கிலிசில் அழைக்கப்படும் இராணிநாயகியாரின் நீதித்தலத்தில் விளக்கப்பட்டது. நஷ்டமடைந்த வாலிபனுக்கு இரண்டாயிரம் பவுன் தெண்டமிறுக்க அக்கோட்டார் தீர்ப்புச்செய்தார்கள். அப்படியானால் நமதூரில் கட்டளைச்சட்டத்திற்குமாறாய் மாட்டுவண்டில்களில் ஏறியிருந்து அச்சபயமின்றி நடுதெருவாலே முட்டாள்த்தனமாய்ச் செலுத்துபவர்களுக்கு எங்கள் மஜிஸ்திரேத்துமார் தெண்டம் விதியாதிருப்பதென்ன?

## பாப்பியக்கோவைச் சிரேஷ்டமேற்றிராணியார்.

கோவையிலிருந்து ஆட்சவிசப்புவென்னுஞ் சிரேஸ்டமேற்றிராணியொருவர் சென்றமாசம் ௨௧ தேதி இரவு சென்னபட்டணம்வந்து சேர்ந்ததாய்க் கேள்விப்படுகிறோம். இவருக்கு வயசு ௭௦ பட்டுக்கிருக்குமாம். இவருடன் ஒரு இங்கிலிசியக்குருவும் இரண்டுகோவைக் குருமாருங் கூடிவந்தார்களாம் இவரொருபுடுத்திக்கேசுகாரனுக்கும். இத்தாலியர்போகக் கோவைக்குருமார் வருகிறார்களெனக் காத்திருக்குமனேகர் "சவுக்கடிப்பட்டானுஞ் சந்தேகந்தீர்ந்தது போதும்" என்றபார்ப்பானைப்போலச் சொல்லித் தங்கள் சங்கையைத்தீர்க்கவிதுவேசாலம்.

ஏதொருமார்க்கமுமின்றிக் கண்டபடிநடக்குங் கரவெட்டியார் இவர் இலங்கைக்குவரும்போது அவரைத்தரிசித்துத் தங்கள்சங்கையையுந் தீர்த்துக்கொள்ளவேண்டுகிறோம். குருமார் மேற்றிராணிமார் வரும்போதே நமதூரில் பாப்பியர்போடும் ஒருபந்தும் வெடிச்சத்தமும் மற்றும் வைத்தியங்களும் விபரிக்கவரிதானதெனக் கண்ட எவருஞ் சாட்சியிடுவார்கள். அப்படியானால் "கல்யாணவீட்டிலழுபவன் செத்தவீட்டைக்கண்டால் ஏதுசெய்வான்" எனப் பென்னம்பெரிய விசயபுவரக்காலும் நமதுபாப்பியர் என்னென்னவைத்தியங்களைத்தான் செய்வார்களோ நாமறியோம்.

## கற்குத்தாவின் அத்தியட்சர்.

முழு இந்தியாவிற்கும் இலங்கைக்குங் குருசிரேஸ்டரான கற்குத்தாவின் அத்தியட்சகுரு இலங்கை பம்பாய்முதலியவிடங்களைத்தரிசித்தார். சென்றமாசத்தில் பம்பாயில் ஐந்து அத்தியட்சகுருமார் சந்தித்தார்களாம் இவரது தெய்வபக்தி ஆழ்ந்த அறிவு போதிக்குந் திறமைகண்டு கேட்ட எவர்களாலும் மெச்சப்பட்டது இவரைத் தரிசிக்க இவரதுபோதனையைக் கேட்கவானபாக்கியம் நமக்கில்லாதுபோனதே மிகுந்ததுக்கம்.

கடிதவுத்தரம்.—"தம்பிமாணுக்கன்" "ஓர் கிறிஸ்தவன்" கடிதங்கள் கிடைத்தது. கொச்சியாலும் மலையாங்கரையாலும் வந்த இரண்டு கடிதங்களைப் பெறறோம். இக்கடிதங்கள் தமிழ் மலையாளம் சமஸ்கிரதம் முதலிய மூன்றுபாஷைக்கலப்போடு நாம்வாசித்து மட்டிடக்கூடாவிதமாய் வரைந்திருக்கிறதால் நாமக்கடிதங்களை ஏதுஞ்செய்யக்கூடவில்லை. அவைகளை வாசிக்கக்கூடியவொருவர் யாழ்ப்பாணத்திலிருக்கிறாரெனக் கேள்வியுற்றோம் அவரவைகளைத்திரும்ப எழுத உதவிசெய்தால் அவைகளைக்கவனிப்போம்.

## பொய்க்காலொன்றில் புதையலெடுத்தல்.

ஒற்றைக்காலைமாத்திரமுள்ள ஒருவன்பிரான்சில்மரித்தான். அவனையடக்கஞ்செய்தபோது அவன்பாவித்த மற்றப்பொய்க்காலையுங்கூடச் சவப்பெட்டியில் வைத்துப்புதைத்தார்கள். மரித்த ஒற்றைக்காலரின் சகோதரி அவன் மரியாமுன்னமெழுதிவைத்த மரணசாதனத்தையெடுத்து வாசிக்கையில் தனது பொய்க்காலிற் புதைத்துவைத்திருக்கும் பொருள் ஐயாயிரம் விருங்கென்று எழுதியிருக்கக் கண்டான். (ஒருவிருங்குபத்துப்பென்ஸ்பொழும்) பிரேதத்தைத் திரும்பச் சவக்கிடங்காலெடுத்துப் பொய்க்காலையாராய்ந்தபோது குறித்ததொகையிருக்கக் கண்டாள். சவம்புரட்டிச்சந்தோஷப்பட்டவள் இவளே. என் சிறிது வைத்தியங்கற்கும் மாணாக்கருஞ் சவமபுரட்டியெடுத்தால் சவத்தின்கால் ஒன்றில்மாத்திரமல்ல முழுஅவயவத்திலும்பொருளுங்கல்வியும் புதைக்கப்பட்டிருக்கிறதைக் காண்கிறார்களென நினைக்கிறோம்.

## பிரசாதிபதி.

அதியுத்தம மகத்துவம்பொருந்திய லிங்கன்துரையென்னும்அமரிக்கன் பிரசாதிபதி துன்பமாய்க்கிடக்கிறாரெனக் கேள்விப்படுவது துக்கம். இவருலகிலுள்ள எந்த முடிமன்னர்க்கும் பிரசாதிபதிகளுக்கும் குறைந்தவரல்ல.

## ஒருவர்வைத்திருந்த புத்தகங்களின்விலை.

மெஸ்தர் றேன்கில் என்னுந் துரையிறந்தபின் விலைப்பட்ட பல சாமான்களைவிட அவர்வசமிருந்த பொஸ்தகங்கள் மாத்திரம் இரண்டாயிரத்தெழுநூற்று எழுபத்தொன்பது பவுன் பதினாறு சிலின் ஆறுபென்ஸ்க்கு விலைப்பட்டதாம். ஒரு உத்தியோகஸதன் வைத்திருந்ததிவ்வளவானால் பண்டிதர்கள் சாஸ்திரிகள் வேதாந்திகளிடமெவ்வளவிருக்கலாம். சிலபுத்தகசாலைகளிலுள்ள புத்தகங்களுக்கு விலையென்ன? இதையறியாது சுத்தப்பிளைகளோடு மூன்றாறு ஏடும் இரண்டுமூன்று புத்தகங்களுமுள்ள நம்மூர்க் கல்விமான்கள் சிலர் தங்களறிவைக்குறித்துக் கொண்டிருக்கிற பெருமை எவ்வளவென ஆர்தான் விபரிக்கலாம் "கல்விக்களஞ்சியம், கலைமகளிருப்பிடம், கவிமாரிபொழியும்மேகம், இலக்கணவிலக்கியக்கடன்முழுதையுங் குடித்தேப்பமிடு காளமேகம்" என்றல்லவா திரிகிறார்கள். சதுர்வேதத்தைக் கனவிலுங்கண்டு கேட்டிராதவர்களானுலுஞ்சாயுட்சியபதவிக்கேறக்கட்டுப்பெட்டிக்குள்(சிவபூசைப்பெட்டிக்குள்) கடவுளைப்பிடித்துவைத்திருக்கிற சாடைகாட்டுகிறார்களே. ஐயோ! இவர்கள் அகந்தையை விட்டு அறிவைச்சம்பாதிப்பதும் அறிவின்பயனாய் இரட்சிப்பையடைவதுமெப்போ?

## யோக்கோகேமா.

ஜெப்பானிலுள்ள யொக்கோ கேமாவிலுள்ள சற்சுமாவென்பவன் செய்தவடாத்திற்குத் தெண்டக்கேட்டுவாங்கும்படி கடற்சேனாபதிகளிலொருவராகிய ஆட்மிறல்கூப்பரை இங்கிலிசியர் அனுப்பியிருந்தார்கள். ஆட்மிறல்போய் அவ்வகையே கேட்டதற்கு அவன் தான்செய்ததற்கு நிவிர்த்தி தான்செய்வதன்முன்னர் தன் தேசத்திலுள்ள சகல இங்கிலிசுகாரரும் தன் தேசத்தைவிட்டுப்புறப்படமேண்டுமெனக் கேட்டானும். இவன் சிதடத்தனத்திற்காய் இங்கிலிசர் என்னசெய்வார்களோ தெரியவில்லை. ஒருவேளை ஆட்மேல் கப்பல் முதலிய சண்டைக்கப்பல்களில் இருந்தவனைச் சிட்சைசெய்யும் நோக்கமாய் வெளிப்படுங் குண்டு ஏரோப்பைத் துரைமக்களையுங் கொல்லாது அங்குள்ள இங்கிலிசுகாரரை அப்பட்டணம்விட்டு எடுக்கவேண்டியும்வரும்.

## ஊர்காவற்துறை நீதவான்.

எங்கள் சிறீ மத் அம்பலவாணத்துரை அரைசசம்பளத்திலாதியிருக்க அரசாட்சியாரிடங் கேட்டிருக்கிறதாயொருபத்திரிகை பேசுகின்றது.

ஐயா, "சைவச்சிறுர்" எனக்கையொப்பமிட்டவர் கடிதத்தை தாம்பிரசித்தஞ்செய்தது சரியல்ல. அவர் சைவத்தில் மாததிரமல்ல அறிவு சன்மார்க்கம் மரியாதைமுதலிய சகலகுணங்களிலும் சிறுரெனக் காணப்படுகின்றது. அவர் கடிதமெழுதின நோக்கமின்னதெனவெனக்குப் புலப்படவில்லை. அவர் சதாசித்தாமணிமாத்திரம் வாசித்தவராக்கும் அதில் கிளைப்பாயிருந்ததைப்பாவிக்கத் தங்கள்பத்திரிகையிற் தோற்றினார்போலும். புறச்சமயவாதிகளை வாதில்வெல்லக் கூடாதபோது கொலைசெய்து தங்கள்சைவத்தை நிலைநிறுத்தின சிலமகான்களைப்போலச் சைவச்சிறுமவர்குறித்த மகான்களுங் கருதுகிறார்போலும் சைவமதத்தை நிலைநிறுத்துகிறோமெனப் பாப்பியமதத்திலேற்பட்டவர்களைக்கொலைசெய்த யாழ்ப்பாணத்தமிழரசனொருவன் செய்கையாலேயே யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவர்கள் வரவுட் இராசாங்கத்தைச் சைவர்கையால் பிடுங்கவுஞ் சம்பவித்தது. அப்படிச்சம்பவித்ததைக்கண்டும் புத்தியடையாத சிலர் தங்களுபாயதந்திரத்தினால் முட்டாட்கள் சாவகாசத்தால் சைவத்தை நிலைநிறுத்த நினைக்கிறார்கள். இது தப்பு. கிறிஸ்த சமயத்திற்குமாறாய் எத்தனைகல்விமான்கள் உலகஞானிகள் அதிகாரிகள் இராசாக்களெழுந்தார்கள். "இந்தக்கல்லிலாரர்விழுந்தாலோ" அவன் நொறுக்கப்படுவான் "இந்தக்கல்லாரில் விழுமோ" அது அவனைநொறுக்கும். சைவமோ "கூருக்குவிரோதமாயுதைப்பது காலுக்குச்சேதம்" கிறிஸ்துசமயம் 'மனுஷராலுண்டானதேலொழிந்துபோம் தேவனாலுண்டானதேல் நீவிரதைக் கெடுக்கமாட்டீர்கள். இதுசத்தியம். சைவசமயக் குரவர்களே, பண்டிதர்களே, வேதியரே, குருக்கள்மாரே, உங்கள் சமயத்திலுண்மையை நீவிர்கண்டதுண்டேல் மனுஷரைப்போல்வந்து அதைத்திருட்டாந்தப்படுத்துங்கள் அல்லாதுபோனால் நீவிரதைக்குறித்தேதுமறியீர்களென்பது உங்கள்மவுனத்தால் வெளிப்படையாகும். நீவிர்மவுனமாயிருக்கவிந்தநியாயத்தையல்லது அந்தப்போக்கைச்சொல்லதிலுஞ்சாமர்த்தியத்தைக்காட்ட முயலாதிருங்கள். இப்படியான சாட்டுப்போக்கையெவரும் விளங்கிக்கொள்வார்கள் இது அறியாமையின்காலமல்ல வெளிச்சத்தின்காலம். துஅசுசம், ஆண்டு அதற்கடுத்தபுருடாவாய் விடுங்கள் "பேசாதிருக்கில் பிழையொன்றுமில்லை" என நாவலநும் பிறருமிருக்கவிடோம்.

இங்ஙனம், ஓர் கிறிஸ்தவன்.

## அல்பேமா.

அல்பேமா என்னும் இந்தத் தென்கட்சியாரது சண்டைக் கப்பல் மலக்காக்கரையிலொரு மாட்டப்பான் என்னும் இங்கிலிசியக்கப்பலைப்பிடித்தெரித்துப்போடடார்கள். மாட்டப்பான் முன் அமெரிக்கியரின் கப்பலாயிருந்தது இதையொரு இங்கிலிசுகாரன் விலைக்குவாங்கிச் செடுநதிட்பும் முடித்திருந்தான். இக்கப்பலைக்கண்டவுடன் அல்பேமா சுட்டதுமாத்திரமல்ல, மந்தாசுசெடித்திப்பு முதலிய மற்றும் பத்திரங்களை வாசித்துப்பார்த்தும் இதை இங்கிலிசியக் கப்பலெனவிடாது ஏறியிருந்த இங்கிலிசியதுவசத்தை மாத்திரம் இறக்கியபின் அக்கினிக் கிரையாக்கினார்கள். காரியம் எப்படியிருந்தாலும் இங்கிலிசிய அரசாட்சிக்கு முறையிட்டிருக்கிறார்கள். தென்கட்சியாரது அல்பேமா மாத்திரமல்ல. மற்றும் அவர்கள் கப்பலேலதும் இங்கிலிசியவரசின்கடற்பரப்பில் தலைகாட்டாதபடி நமது கடல் இராணுவததலைவர் பூமியின் நாற்திசையிலுமுள்ள இங்கிலிசிய கடற்சேனாபதிகளுக்குக் கட்டளையிடுவார்களென நம்புகிறோம். தென்கட்சியாருக்குப்பிடித்த வைத்தியத்திற்குச் சரியான புளிபெண்ணை வைக்கத்தான் வேணும். "அடங்காப்பாம்பிற்கு இராயன் மூங்கில்தடி" "அடிமேல் அடியடிததால் அம்மியும் நகரும்."

## சிவத்துசரும் வைதீகரும்

இவர்களைக் குறித்த காரியங்களைச் சிலகாலமாய் பேசாதுவிட்டோம். அப்படியே விட்டுவிட்டதால் சிவத்துவசருக்கும் வைதிகருக்குமிடையே ஏதும் எழுதக்கூடிய விசேஷவர்த்தமானங்களில்லாதுபோய்விட்டதென நமது பத்திரிகையை வாசிப்போர் நினைக்கவுங் கூடும் சரீரத்தின சிலபகுதிகளிற் தோற்புரைக்குக்கீழாயுள்ளே உண்டுபடுஞ் சில கட்டுக்கள் விம்மிப் பொருமிவேகத்துடன் குத்துவலி தோற்றினாலும் கட்டு எவ்விடத்தில்முகப்வைத்து உடைக்குமென முன்னுத்தேசிப்பது எல்லாராலும் முடிந்ததல்ல. அவ்வகையே சைவசமயிகளுக்குள் பிரிவினையுண்டாய் "சாத்தானுக்குஞ் சாத்தானுக்கும் சண்டையுண்டுபட்ட பான்மையாய் சைவரிற் சிவத்துசரெனவொருகட்சியும் வைதிகரென இன்னுமொருகட்சியுந் தலைப்பட்டு ஒருவருக்கொருவர் பொருதுகொண்டார்கள். இவர்களைக் குறித்துச் சில காரியங்களை நாம் இவர்கள் சச்சரவுதொடுத்தபோதே பேசத்தொடங்கினோம். அப்படிச்செய்வது புத்தியல்லவெனநமக்குப்பின்சோத்தியதால் சிலகாலம் அவர்களைக் குறித்து ஏதும் பேசாதிருந்தோம் ஆனால் இப்போது காரியமிருக்குந் தன்மையை நாம் கவனமாய்ப்பார்த்தால் புற்கைவைத்துக் கட்டிக் கட்டிலுள்ள சிதல் இரசதத்தைப் போக்கத்தக்ககாலமிதுவென நமக்குப் புலப்பட்டதால் அவர்களைக் குறித்துச் சிலகாரியங்களை யெழுததுணிந்தோம். சிவத்துசரெனப் பேர்படைத்த சிலர் ஆறுமுகநாவலரைத் தங்கள் சிரசாய்க்கொண்டு வைதிகருக்கு மாறாய்ப் பல காரியங்களையுஞ் செய்தார்கள். அனேக நூற்றாண்டுக்களாய்ப் பார்ப்பார் வாங்கி வந்த அரிசியை வேதாரணியக்குருக்கள்மாரும் வாங்கத்தலைப்பட்டார்கள். நாவலரது மாணாக்கன் ஆறுமுகஞ்செட்டியார் திதியொன்றில் வேதாரணியக் குருக்கள்மாரைக் கூப்பிட்டு அரிசிகொடுக்க அவரது சகோதரன் வேறாய் வைதிகப்பிராமணரைக் கூப்பிட்டுக்கொடுத்தார். இவ்வகையே அந்த அரிசி சிவத்துசர் வைதிகர் இருவர்க்குங் கொடுபட்டதால் அவர்கள் சீவரெட்சை கருதிக்கொடுத்த ஆன்மாவுக்கிரட்டைமோட்சமுங் கிடைத்திருக்குமென ஆரும் உத்தேசிக்கலாம். இவ்வகையே நாவலரைச்சேர்ந்தோர் சிவத்துசப்பார்ப்பாருக்கல்லது வேதாரணியக்குருக்கள்மாருக்கு அரிசியைத் திதி மாளையம்முதலிய தினத்தில் கொடுக்கத்தலைப்பட்டார்கள். இவைகளைக்கண்ட வைதிகப்பார்ப்பாரொருங்குதிரண்டு சுப்பா, சேஷா, வரதா, விஷ்ணு சுறுக்காய்ப் பிறப்படுங்கான் எனவழைக்க அப்பாவையங்காரே நாங்களனைவரும் வாறோங்கான். என வைதிகர் மாத்திரமல்லச் சிவத்துசரும் துசங்கட்டி வெளிப்பட்டார்கள். பாப்பார்குளாம் உள்ளூர்ப்பிரபுக்களையெல்லாந் தரிசித்து அவர்கள் கும்பிடாவிட்டாலுந் தங்கள் கையையுயர்த்தி ஆசீர்வாதஞ்செய்து தங்கள் குறையை முறையிட்டார்கள். பிரபுக்களும்சைவசமயத்தை நிலைநிறுத்தும்பொருட்டாய் வந்து சென்றவாரத்தில் நீராவியடியிற் பிள்ளையார்கோயிலிற் கூட்டமொன்று கூடினார்கள். இக்கூட்டத்தில் வாசிக்கப்பட்ட பொருத்தஉடன்படியின் சாரமென்னவென்றால் சிவத்துசர் அரிசிவாங்குமிடத்தில் வைதிகரையும் வைதிகர்வாங்குமிடத்தில் சிவத்துசரையும் வைத்து அரிசிகொடுக்கவேணும் இவர்கள் வாங்கவேணும் அப்படிச்செய்யாதவிடங்களில் இருபிரிவாரும் போய் அரிசிவாங்கக்கூடாது. அப்படியல்லவென்றுபோய் அரிசிவாங்கும் பார்ப்பானெவனோ (அவன் சிவத்துசனெனினும் வைதிகனெனினும்) அவன் பார்ப்பார்மரபில் நின்று தள்ளுப்படவேண்டுமெனவும், இவ்விதகாரியங்களை விசாரித்துத் தீர்ப்பிட மூன்று சிவத்துசரும் நாலுவைதிகரும் ஒரு கொம்மிட்டியாய் நியமனம் பெறவேண்டுமென்பதே வாசித்த பத்திரத்தினடக்கம். இப்பத்திரம் வாசிக்கப்பட்டபோது இராமேசுரத்துப்பார்ப்பார் சிலரெழுந்து இப்பிராமணர்பூருவந்தொடுத்துத் தங்களுக்குத் திதி, சிரார்த்தம், வரும்போதெல்லாம் நமக்கரிசிகொடுத்துவந்தார்கள் இப்போதோ இவர்கள் தாங்களே தங்களுக்குள் சிலருக்குக் கொடுத்துவருகிறார்கள். இவர்கள் (அதாவது சிவத்துசரும் வைதிகருமான யாழ்ப்பாணப்பார்ப்பார்) இப்போ வாசித்த உடன்படிக்கைக்குக் கையெழுத்துவைக்கமுன் நமக்கிவர்கள் தந்துவந்த அரிசியை இன்னுமிவர்கள் நமக்கேசரச்சம்மதித்தால் நாமும் இதற்கு உடன்பட்டுக் கையெழுத்துவைப்போமென இடைநடுவழக்காளியாய் வழக்குத்தொடுத்தார். இதைக்கேட்டவிபாபாரப் பார்ப்பாரொருவர் உங்களை நாங்கள்தள்ளி எங்களுக்குட்தானே அரிசியைப் பிரிப்போமென்றாராம். இதினால் எடுத்தகாரியம் பழுதுபோமெனப்பயந்து ஒரு பிரபு இப்படிச்சொன்ன பார்ப்பானைக் கடிந்து இராமேசுரப்பார்ப்பார் கேள்வி சரியெனச் சொன்னார். அதன்மேல் பிரபுக்கள் கேள்விப்படி மூன்றுபார்ப்பார் கையொப்பம் வைத்தார்களாம். அதன்மேல் விளைவேலி, கீரிவேலி, அச்சுவேலி, கட்டைவேலி. கோப்பாய், முதலிய இடங்களிலுள்ள பார்ப்பார்வந்து கையொப்பமிடத் தகதகாய் பொருத்த உடன்படி நிறுத்தப்பட்டதாம். இதுகொத்தாரிசில் முடியும் உறுதியானால் பார்ப்பார் தங்கள்தங்கள் வசதிக்கேற்கவந்து கையொப்பமிட, கொத்தாரிசு ஒருநாளில் எழுதினதாய் உறுதிமுடிக்க ஆரும் கொத்தாரிசில் பிராதுசெய்ய, சுப்பிரீங்கோட்டார் கொத்தாரிசை மரணபரியந்தம் மலாக்காய்க்கே ற்றவருமோ நாமறியோம். மேற்குறித்தவகையே காரியமிருக்கின்றது. சைவருக்குள் சிவத்துசரும் வைதிகரும் கெருடனும் பாம்புமெனத் திரிகிறார்கள். நாவலர் மாணாக்கரிற் சிலர் சிலவேளை வைதிகப் பார்ப்பாரைப்பார்த்துச் சிவன் சடையில் பாம்பைப்போல, 'சிரேஷ்டா சுகமேப்படியென விளவுகிறார்கள்." அதற்கு வைதிகர், 'இருக்கிறவிடத்திலிருந்தால் சுகத்துக்கென்ன" வெனச்சொன்ன கெருடன்போல் உத்தரங் கொடுக்கிறார்கள். (இன்னும்வரும்.)

Edited by C. W. Catheravalupully and Printed and Published by N. Strong at the Press of Ripley & Strong Manepay, Jaffna.

C. W. Catheravalupull